**வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனி - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பெனியில் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கம்பனியின் 2021 டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பெனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பெனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பெனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கம்பெனியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கம்பெனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பெனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கம்பெனியின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது கம்பெனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை கம்பனியினால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆவது பந்தியின் பிரகாரம் கம்பனியிடமுள்ள ரூபா 74,370,330 கிரய பெறுமதியான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அவறறின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தில் மீள் மதிப்பீட்டை மேற்கொண்டு முன்வைக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆவது பந்தியின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பெறுமானத்தேய்வு கணக்கிடும் போது அந்த சொத்துக்கள் தொடர்பாக குறைமீதி பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மேலும் பயன்படுத்திய கிரயம் ரூபா 3,926,147 ஆன 251 தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் ரூபா 6,749,618 கிரயமான 90 அலுவலக உபகரணங்கள் கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியமானதாக காணப்பட்டது. அவ்வாறே, மேற்படி நியமத்தின் 79 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் பொருட்களை மீண்டும் மதிப்பிட்டு உரிய பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் ரூபா 1,341,146 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத மீதிகளாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில், உரிய நிலுவைகளை ஆராய்ந்து, சரியான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். | இந்த நிலுவைகளை கண்டறிந்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியப ண மீதி ரூபா 1,148,219 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அந்த பெறுமதி ரூபா 1,858,502 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 710,283 ஆன இணக்கமின்மையொான்று அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டு வேலைவாய்பு பணியகத்திடமிருந்து பெற வேண்டிய பண மீதி தொடர்பில் தரவுகளை உள்ளடக்கி குறித்த பணத்தை பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கை விடுத்து இதுவரையிலும் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிவு செய்து, பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களிக் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,797,439 கூட்டுத்தொகையான நானாவித கடன் கொடுத்தோர் மீதிகளின் சான்றுபடுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ரூபா 477,630 பெறுமதியான கடன் கொடுத்தோர் ஒருவரின் மீதி மாத்திரம் ரூபா 307,900 ஆக சான்றுபடுத்தப்பட்ட காரணத்தால் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 169,730 ஆன வேறுபாடொன்று நிலவியது. | கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | கடன் மீதிகளின் சிரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய வெளிநாட்டில் தொழிலுக்காக சென்று உயிரிழந்த தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா 7,090,081 ஆன மரண இழப்பீட்டை செலுத்தி விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தாமதத்திற்கு காரணம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் சட்டரீதியான இழப்பீட்டாளர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பதற்கு இன்னமும் முடியாதிருந்தமையாகும். 2022 யூலை மாதத்தில் குறித்த நட்டஈட்டு தொகையானது ரூபா 6,690,081 வரை குறைவடைந்திருந்தது. | வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்களுக்காக கிடைக்கப் பெற்றுள்ள மரண இழப்பீட்டினை உரிய காலத்தில் செலுத்தி விடுவிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச் சட்டத்தின் 133 ஆவது பிரிவு | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெற்றிருக்கவில்லை. | இதுவரையிலும் வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன், நிறுவனத்தின் முழுமையான பங்குரித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு உரியதாகும். | கம்பனி அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

எந்தவொரு வெளிவாரித் தரப்பினருக்கும் பங்குடமை வழங்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 15,326,918 ஆன நட்டமொன்று ஏற்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் நட்டம் ரூபா 6,802,673 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 8,524,245 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,682,766 இனால் குறைவரடைந்தமையும், ஏனைய நிர்வாக செலவினங்கள் ரூபா 5,837,425 இனால் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வேலை நிமித்தம் வெளிநாடு செல்வதை எதிர்பார்த்து கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த 9 கடவுச்சீட்டுகள் 2019 ஆம் ஆண்டில் தொலைந்துவிட்டன, மேலும் இந்த சம்பவத்திற்கு யார் காரணம் என்பதை தீர்மானிக்க முறையான விசாரணை நடத்தப்படவில்லை. எவ்வாறாயினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில்,பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனியினால் 2 வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை ரூபா 20,000 தண்டப்பணம் உள்ளடங்களாக ரூபா 30,000 இற்கும் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பயண அனுமதிகள் குறித்து எந்த முடிவும் இந்த அறிக்கையின் திகதி வரையிலம் எடுக்கப்படவில்லை. | மீதமுள்ள கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கும் கடவுச்சீட்டுக்காக அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை யாரும் முன்வரவில்லை. | கடவுச்சீட்டை முறைகேடாக பயன்படுத்துவதை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும், அத்துடன் கவனக்குறைவாக செயல்பட்ட அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியினால் தகவல் தொழில்நுட்ப பணிகளை முகாமை செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது முகாமையாளர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த துறையில் நவீனமயப்படுத்தல் இடம்பெற்றிராமையால், மீளாய்வாண்டின் போது ரூபா 0.3 மிலலியன் செலவிடப்பட்டு முகவரகத்தின் வலைதளத்தினை நாளதுவரையாக்குவததற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் நிறைவேறியிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதி நிலை சிறந்த நிலையில் இல்லாமையால் இணையதளத்தை புதுப்பிக்க முடியவில்லை. விரைவில் நிதி நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன், உடனடியாக இது தொடர்பான புதுப்பிப்புகள் மேற்கொள்ள உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | தேவையை சரியாக கண்டறிந்து, திட்டமிட்ட பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டில், இன்சிலாப் மருத்துவ நிலையம் அகற்றப்பட்டதன் பின்னர், நிறுவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட 06 குளிரூட்டிகள் உட்பட பெருமளவிலான பொருட்கள் நிறுவனத்தின் கராஜில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அஅந்தத பொருட்கள் முகவரகத்தின் வளாகத்தில் பயிற்சி மையமொன்றினை ஆரம்பிக்கும் நோக்கில் அவ்வாறு வைக்கப்பட்டிருந்தன என கடந்த வருடத்தின் கணக்காய்வு அறிக்கைக்கு பதில் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் கணக்காய்வு திகதியான 2022 யூலை 14 ஆந் திகதி வரை, பொருட்கள் எந்தவொரு உற்பத்தி நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாது மற்றும் பாதுகாப்பின்றி கராஜில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | சம்பந்தப்பட்ட குளிரூட்டிகள் நிறுவனத்தின் மேல் தளத்தில் களஞ்சிய அறையில் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | இந்த உபகரணத்தை பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரிய முறையில் பொது முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், கம்பனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2021 | அந்தந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பின் போது சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நிறுவனத்தின் நிதி நிலை வலுவாக இல்லை மற்றும் வெளிநாட்டு | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, தகுதியான பணியாளர்கள் நிரந்தரமாக பணியமர்த்தப்பட்டு, |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டு வரையிலும் 26 வருட காலப்பகுதியினுள் 16 பொது முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒரு வருட காலப்பகுதிக்காக மாத்திரம் நிரந்தர அடிப்படையில் வரிசை அமைச்சினால் இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2000 ஆம் ஆண்டின் பின்னர் 11 சந்தர்ப்பங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 09 உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் முறையான நடைமுறையொன்றினை பின்பற்றாது அதன் பொது முகாமையாளராக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், கம்பனியின் நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகளின் உயர் பதவிகளுக்காகவும் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டிருந்தனர். | வேலைவாய்ப்பு பணியகத்தின் நிர்வாக நிறுவனமான எங்கள் நிறுவனத்திற்கு பணியகத்தின் உயர் நிர்வாகத்தால் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். | நிறுவனத்தின் செயல்பாடுகளை திறமையாகவும், திறம்படவும் நடத்துவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 1/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2022 மே 24 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய திகதியில் தயாரிக்கப்பட்டதுடன், நாட்டில் கோவிட் அச்சுறுத்தல் காரணமாக, சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்த முடியாதிருந்தமை மற்றும் நிறுவனத்தின் செயலாளரிடம் இருந்து பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற நிலையில், கோவிட் நோய் காரணமாக சம்பந்தப்பட்ட நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டதால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் குறித்த தினத்திற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |